குயில்

குரல்: 1 | புதுச்சேரி, 10 - 2 - 59 செவ்வாய் | இசை: 35

5—2—59 புதுவை, புலவர் குமாரசாமி அவர்கட்கு நடைபெற்ற
பாராட்டுவிழாவின் போது, பொன்னுடை போர்த்துப்
பொற்கிழி அளித்து வாழ்த்துரை நிகழ்த்திய
சென்னைமாநில முதலமைச்சர் **திரு, காமராசர்** அவர்கட்கு விழாக் குழுவின் சார்பில்

பாரதிதாசன் வாழ்த்து

அமிழ்து பசித்தோர்க் ககப்பட் டதுபோல்
தமிழர்க்குக் கிடைத்த தகுகாம ராசரே!
தமிழகம் நிறவெறித் தலைவனால் தொல்லை
சுமந்து துடிப்பது நீங்க, நீவிர்
அமைச்சுப் பதவிக் கொப்பிய அருட்டிறம்
தமிழர் பலபல தலைமுறை மறப்பரிது.

குமரி தொடங்கி இமையம் வரையுள
பெருநிலம் ஒருநா டெனும் பேராட்சி
ஒருபுறம் உங்களை இழுக்க, மறுபுறம்
அலுவல் அனைத்தும் தமக்கே என்னும்
தலைகொழுத்த சாதி இழுக்க
நொடிப்பொழு தேனும் நுண்முறை வழாமல்
அடிப்படை நலங்கள் தமிழகம் அடைய
உள்ளத்தால் பொய்யா துழைக்கும்நீர் தமிழர்கள்
உள்ளத்துள் எல்லாம் உள்ளீர் ஐயா

புதுவையிற் புலவர் குமார சாமிக்கு
நிதிதந்து பொன்னுடை போர்த்த நீவிர்
வருதல் வேண்டும் என்றே மாகப்
பெரும்பணிக் கிடையிலும் வருதல் ஒப்பினீர்
செய்தநன்றி சிறிதும் மறவோம்
வாழ்க காம ராசரே!
வாழ்கநும் ஆட்சி தமிழ்வாழ்தற் பொருட்டே!

புதுவை 5-2-59 வேதபுரீசர் நூல்நிலையத்தில்

புலவர் குமாரசாமி அவர்கட்குப்

பாராட்டு விழா.

புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்களின்
தலைமையில் நடைபெற்றது.

சென்னைமாநில முதலமைச்சர்

திரு, காமராசர்

புலவர்க்குப் பொன்னுடை போர்த்துப் பொற்கிழி அளித்து
வாழ்த்துரை வழங்கினார்கள்.

திரு, தண்டபாணிதேசிகர்
(அண்ணாமலைப் பல்கலைக்கழக தமிழ் விரிவுரையாளர்)
முதலிய அறிஞர் பலர் பாராட்டுரை வழங்கினார்கள்.

விழாவின்சார்பில் கவியரங்கம் நடைபெற்றது.

முதலமைச்சர்க்கு வேண்டுகோள்!

ஏறத்தாழ இரண்டு வாரங்கட்கு முன்னரே புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்அவர்கள் சென்னை மாநில முதலமைச்சர் திரு. காமராசர் அவர்களை நேரிற்கண்டு, புலவர் குமாரசாமிக்கு நடைபெற விருக்கும் பாராட்டு விழாவில கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொண்டார். அப்போது புலவர் குமரசாமியவர்கள் புதுவையில் ஏறத்தாழக் கால் நூற்றாண்டாகவே செய்து வரும் தமிழ்த்தொண்டின் அருமையும் முதலமைச்சர் அவர்களிடம் விளக்கப்பட்டது. முதலமைச்சர் முகமலர்ச்சியுடன் விழாவிற் கலந்து கொள்வதாக ஒப்புக்கொண்டது குறிப்பிடத் தக்கதாகும்.

முதலமைச்சர் வருகைத் திட்டம்

முதலமைச்சர் அவர்களை அழைத்தபோது அதற்கு அவர்கள் ஒத்துக்கொண்டபோது பாரதிதாசன் அவர்களும் முதலமைச்சர் அவர்களும் பேசிமுடித்த வருகைத் திட்டமாவது: 5-2-59 மாலை 5-30 மணிக்கு நேரே, பாரதிதாசன் வீட்டிற்கு முதலமைச்சர் வருகைதந்து சுவை நீர் அருந்துவது. உடனே அங்கிருந்து திருவாளர்களுடன் வேதபுரீசர் நூல்நிலையம் — விழா நடைபெறும் இடத்திற்குச்சென்று விழாவை முடித்துக்கொண்டு திரும்பவும் ஷை பாரதிதாசன் இல்லம்போந்து திருவாளர்கள் பலருடன் விருந்துண்பது-அதன்பின் இரவு 9 மணியளவில் விழுப்புரத்திற்குக் காரிற்செல்வது — அங்கிருந்து மதுரைப் புகைவண்டியேறுதல் என்பதாகும்.

இப்படித் திட்டம் வகுத்தபோது, முதலமைச்சர் சொன்னது: நான் புதுவை வந்தால் முதலில் அரசினர் மாளிகைக்குச்சென்று அத் தலைவரைக் கண்டுவிட்டு, அதன் பின்னர் நாம் வகுத்துக்கொண்டதிட்டப்படி உங்கள் சார்பில்

இருந்துவிடுகின்றேன் — என்றார். இது தவிர, புதுவைக் காங்கிரஸ் பற்றியோ காங்கிரஸ் அலுவலகத்திற்குச் செல்லவேண்டும் என்பது பற்றியோ புதுவை நகரமாளிகை பற்றியோ பேச்சேயில்லை.

அழைப்பிதழ்கள் பறந்தன

5-2-59 ல் நடைபெறவிருக்கும் புலவர் குமாரசாமி பாராட்டு விழாப் பற்றியும், அதன் நிகழ்ச்சி முறைபற்றியும் புதுவையில் அழைப்பிதழ்கள் எங்கும் பறந்தன. பெரிய அளவில் சுவரொட்டியும் எங்கும் திகழ்ந்தது. விழாவுக்கு இன்னும் மூன்று நாட்களே இருக்கின்றன.

திட்டம் உறுதி செய்யப்பட்டது

இதற்கிடையில் சென்னையரசியலார்சார்பில் முதல்வர் காமராசர் உலாத்திட்டம் பாரதிதாசன் அவர்கட்குக் கிடைத்தது. அதுவுமன்றி - முதல்வரின் தனிச்செயலாளரிடமிருந்து உலாத் திட்டம் பாரதிதாசன் அவர்கட்குக் கிடைத்தது அதிலெல்லாம் முதல்வர் காங்கிரஸுக்கோ நகர மன்றத்துக்கோ போவதாக ஒரு குறிப்பும் இல்லை.

புதுவைக்காங்கிரசின் வயிற்றெரிச்சல்

நாம் எல்லாம் இருக்க நம்மையெல்லாம் மதிக்காமல் நேரே இந்த முதல்வர் எப்படி. பாரதிதாசன் அழைப்புக்குஒத்துக் கொள்ளலாம் இதை விட்டு வைத்தால் மேலே நம் அரசியல் வாணிகம் எப்படியாவதுஎன்று வயிற்றெரிச்சல் அடைந்தார்களாம். அதன் பயனாக அவர்கள் இரண்டு வகையான காரியத்தைச் செய்வதென்று முடிவு செய்திருக்க வேண்டும்.

ஒன்று, பாரதிதாசன் அவர்களை அச்சுறுத்துவது.

மற்றொன்று நேரே வேங்கடசுப்பாரெட்டியாரை முதல்வரிடம்அனுப்பிக்கெஞ்சவைப்பது.

பாரதிதாசன் வீட்டெதிர் இரவில் மூன்று வீரர்கள்

விழாநடைபெறும் முதல்நாள் இரவும்அதன் முன்னாளும் காலிப்பசங்கள்மூவர்கள் குபேரிசம் நடத்தினார்கள். காமராச நாடாருக்கு இங்கு என்னடா வேலை? பாரதிதாசன் அழைத்தான் என்றால் இவனுக்கு என்னஆணவம். வரட்டும் அவர்! வெளியில் வருவானா இவன்! இவையும் இவற்றோடு குபேரிசப் பேச்சுக்களும்! இவ்வொலி இரவெல்லாம் விட்டு விட்டு ஒலிக்கும் ஆனால் ஆட்கள் மட்டும் அகப்பட மாட்டார்கள்.

குபேருக்கு இன்னும் ஓடுகிறதாம் ஓட்டம்.

இன்று புதுவையில்நடைபெறும் கிருஷ்ணசாமி ஐயங்கார் ஆட்சியில் உள்ள அலுவல்காரர்களில் இரண்டு கட்சி உண்டு. ஒன்று பெரிய கட்சி அதுதான் சேஷன் கட்சி. மற்றொன்று சின்ன கட்சி; அஞ்சுகின்ற ஆனால் பெருந்தன்மை வாய்ந்த அலுவல்காரர்களைக் கொண்டது இது. குபேரை விட்டால் தன் இனக்கோட்பாட்டை ஈடேற்றிக் கொள்ள முடியாது என்று எண்ணுகின்றது சேஷன் கட்சி. சேஷன் கட்சியல்லாமல் என்னை எவர் சீண்டுவார் என்று எண்ணுகின்றார் குபேர் துரை.

உங்களுக்குத் தெரியுமா சேஷன் அலுவல் இன்னதென்று? - அவர்தாம் அரண்மனைத் தலைவர், அதாவது அரசியல் அலுவலகத்தலைவர்.

புலவர் குமாரசாமி அவர்கட்கு நடந்த பொன்னாடை போர்த்து விழாச் செய்திகள் மிகுதியாக இடம்பெற்றமையால் - தலையங்கம் - வந்தவர் மொழியா - பிசிராந்தையார் ஆகிய மூன்று பகுதிகளும் நிறுத்திவைக்கப்பட்டுள்ளன. நேயர்கள் பொறுத்தருள்க.

— அமைச்சர்.

உங்களுக்குத்தெரியுமா எப்போது புதுவை அரசு உருப்பட முடியும் என்று? சேஷன் இங்கிருந்து ஒட்டப்பட வேண்டும்: குபேர் அரசியல் உலகிலிருந்து ஒழிக்கப்படவேண்டும்.

புதுவைக் காங்கிரஸ் அலுவலகம்

இவ்வாறு குபேரிசம் பாரதிதாசன் வீட்டண்டை துவக்கமடையும் முன்னமே புதுவைக் காங்கிரஸ் அலுவலகத்திலிருந்து பாரதிதாசன் அவர்கட்கு ஒரு செய்தி கிடைக்கின்றது "சென்னைக் காங்கிரஸிலிருந்து புதுவைக் காங்கிரசுக்கு ஓர் அறிவிப்பு வந்திருக்கிறது. அந்த அறிவிப்பைக் குபேரும் வேங்கடசுப்பா ரெட்டியாரும் தெரிந்துகொண்டால் முதல்வரிடம் ஓடிக் கெஞ்சி, புதுவைப் பாராட்டு விழாவிற்கே முதல்வரை வராமற் செய்துவிடக் கூடும் ஆதலால் நான் அந்த அறிவிப்பை அழுத்திப் போட்டு விட்டேன்." என்பதுதான் அந்தச் செய்தி. உண்ட வீட்டிற்கு இரண்டகம் செய்யும் இந்தத் தோழர் நம் உறவைப்பெற முயலுகின்றார் எனினும் நாம் அவர் உறவை ஏற்றுக் கொள்வது தருமமாகாது ஆதலின் அவருக்கு – நீர் அப்படிச் செய்வது முறையன்று என்று சொல்லியனுப்பியதோடு, காங்கிரஸ் தலைவருக்கும் இளைஞர் காங்கிரஸ் தலைவருக்கும் ஓர் ஆள் மூலம் விழாவின் அழைப்பையும் அனுப்பி வைக்க ஏற்பாடு செய்தார் பாரதிதாசன் அவர்கள்.

வேங்கிடசுப்பர் ஏங்கிடவிடவில்லை

பன்முறை வேங்கடசுப்பாரெட்டியார் முதல்வரைக் கண்டு கெஞ்சி அழைத்ததற்காக முதல்வர் நேரமிருந்தால் பார்ப்போம் என்று மட்டும் கூறினர் என்று எண்ணப்படுகின்றது. நகரசபையினர் கோரிக்கைக்கு இணங்க வேண்டியது பிரஞ்சு முறைப்படி சரியானதே,

முதல்வர் புதுவையை நோக்கிக் கிளம்பும் போது அவர் வாயிலின் எதிரில், விழாக்குழுவினர் ஏற்கனவே சொல்லியிருந்தபடி ஒரு நல்ல கார் நின்றுகொண்டிருந்தது. என் கார் இருக்கட்டும் நான் உங்கள் காரிலேயே வந்து விடுகின்றேன் என்று முதல்வர், விழாக் குழுவினரிடம் கூறி விழாக் குழுவினர் காரிலேயே ஏறிக்கொண்டார்.

காமராசர் பெருந்தனம்

கார் புதுவை அரசினர் மாளிகைக்கு வந்தது அந்தச் செய்தி பாரதிதாசன் அவர்கட்கு அறிவிக்கப்பட்டது. அதோடு தாம் நகரமாளிகை செல்வதும் அறிவிக்கப்பட்டது. மற்றொன்று; காங்கிரஸ் தலைவர் வேங்கடசுப்பாரெட்டியாருக்காகக் காங்கிரஸ் அலுவலகத்தில் தலையைக் காட்டிவிட்டு வரவா என்று கேட்டார். அவ்வாறே செய்யுங்கள் என்று சொல்லவே, முதல்வர் காங்கிரஸ் அலுவலகத்துக்கும் போய்க் குறித்த நேரத்தில் பாரதிதாசன் இல்லத்தில் சுவைநீர் அருந்த வந்து சேர்ந்து விட்டார்கள்.

பாரதிதாசன் இல்லத்தில் முதல்வர் சுவைநீர் அருந்தப் போவதையாவது நிறுத்திவிடலாம் என்று குபேர் எண்ணியதில் வியப்பு ஒன்றுமில்லை. ஆனால் பாராட்டக்கூடிய இடம்வேறு: அது வேங்கடசுப்பரெட்டியாருக்காகக் காங்கிரஸ் அலுவலகம் செல்ல முதல்வர் ஒப்பியதுதான் நகரமாளிகையைவிட்டு வெளிவந்தவுடன் முதல்வர் தயங்கி நிற்கும் ரெட்டியாரைமட்டும் தம்முடன் காரில் ஏற்றிக்கொண்ட ஒரு செயலே இதை விளக்கியிருக்கக் கூடும்.

சுவைநீர் அருந்தினர்

திரு. முதல்வர் கமாராசர் அவர்கள் பாரதிதாசன் இல்லத்தில் மாலை மரியாதையுடன் வரவேற்கப்பட்டார். வரவேற்றவர்கள், பெருவாணிகர், அலுவல் அதிகாரிகள், வழக்கறிஞர்கள். பிணிநீக்கியார் (டாக்டர்)

சுவைநீர் அருந்தி முடிந்தவுடன், சிறிது நேரம். உடனிருந்த திருவாளர்கள் அறிமுகப் படுத்தப்பட்டார்கள், முதல்வருக்கு!

அதன் பிறகு விழாத்தலைவர் புலவர் குமாரசாமியும். பிறரும் உடன்வரக் காமராசரின் கார் விழாமன்றம் நோக்கிப் புறப்பட்டது. மற்றவர்களும் பலகார்களில் தொடர்ந்து சென்றார்கள் இசைக் கருவிகள் முழக்கம் செய்தன.

முதல்வர் காமராசரும், பாரதிதாசன் புலவர் குமாரசாமி முதலியவர்களும் விழா நடைபெறுமிடமாகிய வேதபுரீசர் நூல் நிலையம் புக்க போது. அவர்கள் வெளியிலும் உள்ளேயும்

புதுவைப் பெருமக்கள் எல்லோரையும் கண்டு மகிழ்ந்தபடி தம் இருப்பிடத்தை அழகு செய் தார்கள்.

அவைத்தலைவர் பாரதிதாசன் அவர்கள்

பாரதிஆலையுடையவர் செ ன் னி ய ப் ப முதலியார் வருகைதந்துதவிய முதல்வரையும் பெருமக்களையும் வரவேற்றுப் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்கள் இவ்விழாவுக்குத் தலைமை தாங்கிக் கூட்டத்தை இனிது நடத்தித் தருமாறு முன் மொழிந்தார். தோழர் கலைமணி வழிமொழிந்தார்.

புரட்சிக்கவிஞர் தலைமையுரைச் சுருக்கம்

அன்புள்ள சென்னை மாநில முதலமைச்சர் காமராசர்அவர்களே, தாய்மார்களே, பெரியோர் களே, இன்று நடைபெற இருப்பது புலவர் குமாரசாமி அவர்களின் பாராட்டு விழாவாகும்.

இவ்வாறு பாராட்டத் தகுந்த தகுதி புல வர்க்கு என்ன இருக்கிறது என்று கேட்கலாம். பிரஞ்சுக்காரர்இருநூறுஆண்டுகளுக்கு மேலாக இந்தப் புதுவையை ஆண்டார்கள். ஆயினும், அவர்கள் த மி ழு க் கு ஒரு நிறுவனத்தையும் தோற்றுவித்தாரில்லை. பிரஞ்சு கலைஇங்குப் பரவ வேண்டும் என்பதிலேயே கண்ணுங்கருத்து மாயிருந்தார்கள். த மி ழு க் கு நிறுவனம் இல்லையே, வளர்ச்சியில்லையேஎன்று கேட்டால் துறத்திக் கொண்டுவருவார்கள்.

ஒருவர் தமிழில் புலவை பெற வேண்டு மானல் அவராகக் கையூன்றி எழுந்திருக்க வேண்டும். சென்னை முதலிய இடங்களில் போய்த் தேர்வு பெற்று வர வேண்டும்.

பிரஞ்சுக்காரர்தாம் தமிழ்வகையில் இப்படி நடந்து கொண்டார்கள். அதன்பிறகு ஆளவந்த இவர்களாவது ஏதாவது தமிழுக்குச் செய்தார் களா என்ருல் இல்லவே இல்லை. சட்டமன்றில் முதற்காலத்திலேயே நான் (பார்திதாசன்) தமிழுக்குக் கல்லூரி ஒன்று எற்படுத்த வேண் டும் என்ற தீ ர் மா ன த் தை க் கொண்டு போனேன். அது எல்லாராலும் ஒருமுகமாக ஒத்துக் கொள்ளப்பட்டு நிறைவேறியது. அடுத்த ஆண்டில் அது செயலுக்கு வரும் என் ருர்கள். பிறகு அடுத்தபடியாக வரும் என்ருர் கள். இல்லை. தீர்மானத்தின் நகலாவது இருக் கிறதா? என்று சட்டசபை அலுவலகத்தில் தேடினேன். அத்தாள் கிழித்து எறிப்பட்ட தென்று தெரிந்தது. தமிழுக்கு; ஆட்சியாளரும், சட்டசபைத் தலைவர்களும் அமைச்சர்களும் செய்த நன்மை இப்படி!

இவ்வாறு ஒரு பிடிப்பும் இல்லாத தமிழ் இன்னும் உயிருடன் இருந்து வருகிறது. என்ருல் — தமிழ்ப் புலவர் குமாரசாமி தாம் சென்ற கால்நூற்ருண்டாகப் பலவகையிலும் தமிழுக்குத் தொண்டாற்றிய புலவர். இன்று போர்த்தப் போகும் பொன்னுடையை ஆரைக் கொண்டு போர்த்துவது? பொற்கிழி கொடுப் பதை யாரைக் கொண்டு கொடுப்பது? - யார் தகுதி யுடையவர். தமிழை ஒழித்துக் கட்டும் புதுவையில் புலவர்க்குப் பொன்னுடை போர்த்த, தமிழே தமிழகத்தில் ஆட்சி மொழி யாக வேண்டும் என்று சட்டம் செய்தருளிய புண்ணியவான் கா ம ரா ச ரை த் தே டி ச் சென்றேன்.

நிலைமையைக் கூறிக் காமராசரை அழைத்த போது அவர்கள் மகிழ்ச்சியோடு ஒப்புக்கொண் டார்கள்.

நம் தாய் மொழியாகிய தமிழை இவ்வகை மனிதமுயற்சியால் காப்பாற்ற மு டி யு மே அல்லாது வரவேற்புரையில் சென்னியப்ப முதலி யார் கூறியபடி தமிழுக்கும் தெய்வத்துக்கும் ஒரு நெருங்கிய தொடர்பு இருப்பதாக எண்ணி வாளா விருந்துவிடக்கூடாது.

தமிழ் சிவபெருமானுல் செய்யப்பட்டது சிவபெருமானுல் ஆராய்ந்து திருத்தம் செய்யப் பட்டது என்று கூறி மனநிறைவு அடைந்து தூங்கிக்கொண்டிருந்ததால் தான் இன்றுதமிழின் நிலை வருந்தத்தக்க தாகிவிட்டது. தமிழுக்கும் தெய்வத்திற்கும் தொடர்பிருக்கிறது என்ருல் அந்தத் தெய்வம் எது? அப்படி ஒன்று இருக் கிறதா?

இருந்தால், தமிழ்ச் சொல்லெல்லாம் வட சொல்லில் இருந்து வந்ததென்றும், தமிழே வடமொழிச் சிதைவென்றும், தமிழ் நாகரிகம் ஒன்று இருந்ததில்லை வடவர் நாகரிகத்தி னின்றே தோன்றியதுதான் என்றும் கூறத் துணிவார்களா ?

அறக்கம் சுவர்க்கம் என்பதினின்று வந்த தென்று கூறுவார்களா ?

இந்தக் காட்டு மிராண்டி நம்பிக்கைகள் எல்லாம் ஒழியவேண்டும் மக்கள் முயற்சி என்பதையே நம்பி முன்னேற்றமடைய வேண்டும் என விரிவாகப் பேசிய, பின் விழாக் குழுவினர் சார்பில் முதலமைச்சர்க்கு வாழ்த்துரை ஒன்றும் படித்தார்.

(அதைக் குயில் முதற்பக்கத்தில் காண்க)

திருவாவடுதுறைத் திருநெறி

அதன்மேல் புலவர் குமாரசாமி அவர்கட்குத் திருவாவடுதுறைத் திருநெறியாரால் அனுப்பப்பட்ட பொன்னுடையை அத் திருநெறி அன்பர் ஒருவர் தலைவரிடம் தர,

அதையும் 1001 வெண் பொற்காசுகள் கொண்ட பண முடிப்பொன்றையும் தலைவர் முதல்வரிடம் கொடுத்துப் புலவர்க்குப்போர்த்தி யுதவும்படி கேட்டுக்கொண்டார்.

முதல்வர் காமராசர் உரை

பேராசிரியர்க்குப் பொன்னுடை போர்த்துப் பேசியதாவது.

புரட்சிக் கவிஞர் அவர்களே, தாய்மார்களே தோழர்களே சுமார் ஒரு மாதத்துக்கு முன்பு நம் கவிஞர் பாரதிதாசன் கேட்டுக்கொண்டதற் கிணங்க நான் இவ்விழாவில் கலந்து கொள்ள ஒத்துக்கொண்டேன். பேராசிரியர் குமாரசாமி அவர்களை இதற்குமுன் நாம்பார்த்திருக்கிறோமா என்று யோசித்தேன் நான் எங்கும் அவரை பார்த்ததோ கேள்விப் பட்டதோ இல்லை எனினும் நம் புரட்சிக்கவிஞர் அவர்கள் இவ் விழாவிற்கு நான் வந்து பேராசிரியர்க்குப் பொன்னுடை போர்த்துப்பொற்கிழி அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். நானும் ஒத்துக்கொண்டேன், காரணம், கவிஞர் அவர் களே இத்தகு மரியாதைகளைப் பேராசிரியர்க்குச் செய்ய வேண்டுமெனமுடிவு செய்தபின் நான் யோசிப்பதற்கு ஒன்றுமில்லை! மேலும், பேரா சிரியர் மாணவர்கள் கவியரங்கில் பாடியவை எனக்கு விளங்க வில்லை,! படித்தால் ஒருவேளை விளங்கலாம் (சிரிப்பு) நிற்க பிரஞ்சுக்காரர் ஆட்சி நீங்கி நம்மவர் ஆட்சி வந்த பின்னும் தமிழுக்கு ஆக்கம் அளிக்கப்பட வில்லை என்று கவிஞரவர்கள் கூறினார்கள். இத் தவறுக்கு யாரும் பொறுப்பல்ல, நாம் தான் பொறுப்பு. ஏனெனில் இது நம்முடைய அரசாங்கம். எனக்கு இத்தகு ஒரு வாய்ப்பை ஏற்படுத்தித் தந்தமைக்கு உங்கட்கும் நம் புரட்சிக்கவிஞர் அவர்களுக்கும் நன்றி கூறிக் கொள்கிறேன். வணக்கம்.

பாராட்டுரை

தமிழ்ப் பேராசிரியர் அவர்களின் அறிவுத் திறனை விளக்கித் திருவாவடுதுறை ஆதின வித்துவான் தண்டபாணிதேசிகர் அவர்கள், பாராட்டிப் பேசிய பின்னர், கடலூர் செண் ஜோசப் உயர்நிலைப் பள்ளித் தமிழ்ப்புலவர் திரு தியாகராச தேசிகர் அவர்கள் சிறிது நேரம் பாராட்டிப் பேசினார்கள்.

பரிசும் வாழ்த்தும்

பேராசிரியரைப் பாராட்டித் திருவாவடு துறைத்திருநெறியின் சார்பாகவும், புலவர் இறுதி நிலை மாணவர்களின் சார்பிலும் வாழ்த்துப்பா, படித்தளிக்கப்பட்டது. இன்னும் பேராசிரியர் அவர்களின் மாணவர், அன்பர், உறவினர் முதலானோர் அன்பளிப்புக்கள் வழங்கினர்.

தலைவர் முடிவுரை

கவியரங்கம் பற்றி முதல்வர் கூறியதை நீங்கள் மனதில் இருத்தவேண்டும். எளியநடை எல்லோருக்கும் புரியக்கூடிய நடை வேண்டும் என்றுதான் முதல்வர் குறிப்பிட்டார்கள். பாரதியார் குறுகிய காலத்தில் பெரும்புகழுக் குரியவர் ஆனார் என்றால் அவர் எளிய நடையில் அன்றைய தமிழர்க்குத் தேவையான கருத்தை வைத்துக் கவிதைச்சுவை கெடாதமுறையில்

(தொடர் 11 ஆம் பக்கம்)

பார்ப்பனரும் தமிழும்

பார்வேந்தன்

சென்றஇதழ்த் தொடர்ச்சி

அவ்வாறு எழுதும்போது சொல்லுவதானது ஒலிக்குறிப்பும் வேகமும் சேர்ந்து எழுதுவானுக்கு ஓரோவழி ஒருசொல் மற்றொரு சொல்லாக - ஆயின் அதை ஒட்டிய சொல்லாகக் கேட்பது உண்டு. அதனால் அவன் அதைப் பிழைபட எழுது தலும் உண்டு! அவ்வாறு ஏற்படும் பிழையினையே நாம் பாடபேதம் என்று கூறுகிறோம். எடுத்துக் காட்டிற்கு ஒருசில உதாரணங்களை உங்கள் முன் வைக்கின்றேன்.

''சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்துப° உழவே தலை'' குறள் 1031

இக்குறளில் உழந்தும் என்பது உழன்றும் என்று பாடமாகக்காணப்படுகிறது அஃதவ்வாறே. இன்னு மோர் எடுத்துக் காட்டும் காணுக.

''எருதுகால் உருஅது இளைஞர் கொன்ற
சில்விளை வரகின் புல்லென் குப்பை''
புறம் 327

இதில் இளைஞர் என்னும் சொல் இளையர் என்னும் பாடமாகக் காணப்படுகிறது. இன்னுமொன்று,

''துன்னருஞ் சிறப்பின் உயர்ந்த செல்வர்
இன்மையின் இரப் போர்க்கு ஈஇயாமையின்
தொன்மை மக்களின் தொடர்பறி யலரே''
புறம் 165

இதில் ஈஇயாமையின் என்ற சொல்லுக்கு ஈயாமரபின் என்று பாடபேதம் காணப்படுகிறது. எடுத்துக் காட்டிற்கு ஒன்றிரண்டு இங்கு எடுத்துக்கூறினேன். இன்னும் இதுபோன்று சங்க இலக்கியங்கள் அனைத்திலுமே பாடபேதம் காணத்தான் செய்கிறது.

இருப்பினும் 'உழந்தும் என்பதற்கு உழன்றும்' என்றும் 'இளைஞர் என்பதற்கு இளையர்' என்றும் 'ஈஇயாமையின் என்பதற்கு ஈயாமரபின்' என்பதற்கும் உள்ள பாடபேத ஒற்றுமையை நீங்களே கண்டு கொண்டு நான் அழைத்துச் செல்லும் இடத்திற்குச் சற்றே வந்து பாருங்கள்.

குரவர்த் தப்பிய கொடுமை யோர்க்கும்
வருவாய் மருங்கிற் கழுவாயு முளவே''
புறம் 34.

''பார்ப்பார்த் தப்பிய கொடுமை யோர்க்கும்
வருவாய் மருங்கிற் கழுவாயு முளவே''
புறம் 34

மேலே காட்டப்பட்டவற்றுள் வேற்றுமைகள் காணப்படுவது ஏன்? 'குரவர்த்தப்பிய' என்பதற்கும் 'பார்ப்பார்த் தப்பிய' என்பதற்கும் என்ன தொடர்பு இருக்கிறது? மேலோட்டமாக ஒலிக் குறிப்பில் தெரியாது போயினும் பொருளோட்டத்திலாவது ஏதாவது அடிப்படை ஒற்றுமை இருக்கிறதா? 'குரவர்த்தப்பிய' என்று ஒருவர் கூறும்போதுசொல் வோனுடைய ஒலி அழுத்தத்தினாலோ வேறு பாட்டாலோ அச்சொல்லை எழுதுவான் ஒருவன் 'பார்ப்பார்த் தப்பிய' என்று எழுதமுடியுமா? நீங்களே சிந்தித்துப் பாருங்கள். பின் எப்படி 'பார்ப் பார்த் தப்பிய' என்ற சொல் வந்தது என்றுதானே எண்ணுகிறீர்கள்? அது 'பாட பேதமல்ல' பார்ப் பனர்களின் சூழ்ச்சியால் பைந்தமிழுக்கு இழைக்கப் பட்ட 'ஏதம்' எனக்கொள்க.

'ஏதம்' என்று (குற்றம்) உள்ளத்து எழுந்த வேதனையால் கூறினேன் என்றால் என்ன குற்றம்? என்று கற்பார்க்கு எண்ணம் எழுவது இயற்கை. எனவே நாம் அதன் பொருளைச் சற்று எண்ணிப் பார்ப்போம்.

'குரவர்' என்றால் தாய் தந்தையர். இச்சொல் சங்க இலக்கியங்கள் பலவற்றுள்ளும் தொல்காப்பி யத்தும் பயின்று வந்திருத்தல் கற்றறிருந்த பெற்றிமையோர்க்கு நன்கு புலனாகும்.

ஈயென்று இரத்தல் தீதும் இழிவுமாகும். ஈயென்று கேட்டபின்னை இல்லையென்றல் அதனினும் பெரும் இழிவாகும் என்றாற்போலக் கொடுமை செய்தல் தீது. பெற்றவர்க்குக் கொடுமை செய்தல் அதனினும் தீது. அப்படியே கொடுமை செய்து விட்டாலும் அச்செய்த குற்றத்திலிருந்து தப்பித்துக் கொள்ள 'கழுவாய்' (வழி) உள்ளது. ஆனால் செய்நன்றி அறியாது அதனைமறந்து நிற்பின் அதற்கு கழுவாயே இல்லை என்று கூறி செய்நன்றி அறிதலின் திறத்தையும் தாய் தந்தையர்க்குச்செய்ய வேண்டிய அறத்தையுமே வலியுறுத்தி நின்றது 'குரவர்த் தப்பிய' என்று தொடங்கும் புறநானூற்றுப் பாடல்.

'பார்ப்பார்த் தப்பிய' என்று திரித்துக் கூறியதனால் தமிழருக்குப் பெரும்பெரும் இழப்புக்கள் ஏற்பட்டிருக்கிறது. என்னவிது 'பார்ப்பார்த் தப்பிய' என்ற ஒருசிறு மாறுபாட்டினால் பெரும் பெரும்

இழப்புக்களா? என்று மலைக்கத் தோன்றுகிறதா? ஆமாம்! சிறிதல்ல! பேரிழப்பு! அங்கேதான் பார்ப்பனர்களின் வன்கண் சூழ்ச்சித் திறமை நன்கு பளிச்சிட்டு மின்னலிடுகிறது.

ஏற்கனவேயே ஆரியர்தம் வருகையால் தமிழர் தம் மொழி, கலை, சமயம், கொள்கை எல்லாம் கலப்புற்று புராணக் கருத்துக்களும் பொய் மலிந்த கட்டுக் கதைகளும் மலிந்தன என்று கண்டோம்.

தமிழர் ஆரியர்தம் நிறத்தாலும் பழக்க வழக்கத்தாலும் தம்மினும் வேறாக இருத்தல் கண்டு ஒதுங்கியே வாழ்ந்தனர். அதனைப் பயன்படுத்திக் கொண்ட ஆரியர் தம்மைத் தமிழரைக் காட்டிலும் உயர்ந்தவர்கள் என்றும் தாங்கள் கடவுளின் நெற்றியில் பிறந்தவர்கள் என்றும் பல கட்டுக்கதைகளை மக்களிடையே பரப்பினர்.

இக்கொள்கையை முதலில் தமிழர்கள் வெறுத்தார்கள். ஆயினும் நாளடைவில் அவ்வாரியராலும் அவ்வாரியருக்கு அடிவருடும் அடிவருடிகளாலும் தாம் தாழ்ந்தவர்களே என்ற நிலைக்கு இழுத்துச் செல்லப்பட்டார்கள்என்பது வரலாற்று ஆசிரியர்கள் பலரும் கண்ட உண்மை.

"பார்ப்பார்த் தப்பிய கொடுமை யோர்க்கும்
வழுவாய் மருங்கிற் கழுவாயு முளவே"

புறம் 32

என்று திருத்தியதனால் எப்படி கழுவாய் உள்ளது? என்ற கேள்வி எழுகிறதல்லவா? எழுகிறது! உண்மை! இருக்கட்டும்!

இன்று பார்ப்பனர்கள் பெரும்பாலும் எவ்வாறு தங்கள் வயிற்றுக்குச் சோறு தேடுகின்றனர்? நெற்றி வியர்வை நிலத்திலே விழப்பாடுபட்டா? இல்லை! இல்லை! மேல் வளையாமல் உடல் குனியாமல் ஏமாந்த காரணத்தாலே தமிழர்களைத் தாழ்த்தி பெரும் பெரும் அதிகாரிகளாக அலுவலகங்களிலே வேலை செய்கிறார்கள் என்பது இருபதாம் நூற்றாண்டுக் காலக்கண்ணாடி நமக்குக் காட்டும் படக்காட்சியாக இருப்பது யாவரும் அறிந்த உண்மை.

ஆனால் இதற்கும் இதற்கு முந்திய இடைக் காலத்தும் சங்க காலத்தும் எவ்வாறு வாழ்ந்தனர்? உடல் வருந்தபாடுபட்டதாக எந்த நூலும் நமக்குக் கூறவில்லை. இவர்கள் தொழிலே ஓதல், ஓதுவித்தல் வேட்டல், வேட்பித்தலேயாகும். மேலும் மேற்கூறியவாறு திருத்தங்கள்வேறு செய்து வைக்கையிலே ஒன்றுமறியா ஏழைமக்கள் வாழ்வில் இன்னகுற்றம் செய்திருந்தால் அதற்குக் கழுவாயாகப் பார்ப்பனர்களுக்கு இவ்வளவு பொன்னோ? பிறவோ? கொடுத்துவிட்டால் உய்தி பெறலாம் என்று கூறும் பொழுது வேறு என்ன செய்வார்கள்? 'நற்கதி' என்ற பொய்க்கூற்றைக் காட்டும்போது தங்கள் வாயையும் வயிற்றையும் பட்டினி போட்டாவது அப்பார்ப்பனர்களை மகிழ்வித்துத்தானே இருந்திருக்கிறார்கள். இருக்கிறார்கள். இவ்வாறெல்லாம் படித்தவர்களையும், படியாதவர்களையும் ஏமாற்றி தங்கள் வயிற்றுக்காகத் தமிழுக்குச் செய்திருக்கிற 'தொண்டை' 'திருத்தத்தை' அறிவறிந்த தமிழ் மக்களே! நீங்களே சற்று எண்ணிப் பாருங்கள்!

இப்பொழுது
தமிழகமெங்கும் வெற்றிகரமாக
ஓடிக்கொண்டிருக்கும்



அன்னபூரணாவின்
'மஞ்சள் மகிமை'யில்
தங்கவேலு, ராஜசுலோசனா, பாலாஜி
முதலானோர்.

மல்லிகையே!

"கயல்விழி"

மணம் பரப்பும் மல்லிகையே!

மையல் மிக ஊட்டி பைய நெருங்கும் இளங் காதலர்கட்கு உனது நறுமணம் போதையூட்டிப் பெருமகிழ்வு எய்துவிக்குமாமே இது உனக்குத் தெரியுமா?

இவ்வளவு மணம் பரப்பும் மலராக நீ ஏன் உலகிடைப் பிறந்தாய்? சின்ன இதழ் விரிய, மெல்லச் சிரித்திடும் மங்கையர் உன்னைநாடித் தேடி நலமுடன் கோத்தெடுத்துக் குழலிடைச் செருகி எழில் பெருக்கி வரும்பொழுது ஆடவரது நெஞ்சம்என்னும் பாறை உனது நறுமணம்என்னும் உளியால் தகர்த்தெறியப்பட்டுக் கிறுக்கேறிப் பைத்தியமாகிறது என்பது உனக்குத் தெரியுமா?

எழில்பெறச் சிரித்திடும் மல்லிகையே! உன்னை ஒரு வெண் சங்குங்கு ஒப்பிடுகிருன் - அழ கொழுகும் தமிழில் வெண்பாப் பாடிய புகழேந்தி. நீ சங்காயின் உன் மென்மை அதனிடம் உண்டா? நறுமணத்தை தென்றலில்இழையவிட்டுத் தையலார் தம் கருங்குழலில் வீற்றிருக்கும் பெரும்பேறு அதற்குக் கிடைக்குமா? அல்லது தோகையவளின் தலையினில் வீற்றிருந்து நறுமணம் என்கின்ற பேச்சை ஆடவர் என்னும் அரசனிடம் தூதுவிடும் உன் குறும்புச்செயலை அதனிடம் காணமுடியுமா?

சங்கெனில் தோற்றத்தை மட்டும் கொள்ள வேண்டும் — இது ஒருபுடையொப்புமை என இலக்கண அமைதி கூறலாம்; இலக்கணம் கற்றவர்கள். ஆயின் நான் ஒப்புக்கொள்ள மறுக் கிறேன் உன்னைச் சங்குடன் ஒப்பிட்டமைக்கு.

வெண்மையில் தூய்மைசேர்த்து விளங்கும் மல்லிகையே! நீ உள்ளம் புழுங்கி வருந்தி அழுவது எனக்குமிக நன்ருகக் கேட்கிறது. அந்தோ உன் நிலை கண்டு நானும் இரங்குகின்றேன். உயிரற்ற படத் திற்கும் கல்லிற்கும் செப்புச் சிலைக்கும் உனது இளமையை அழகை, நறுமணத்தை மென்மையை இவையனைத்தும் ஒருங்கு கூடிய ஒரு தனி அழகுத் திரட்சியை வீணுக்குகிருர்கள் என்றுதானே வருந்து கிருய். மனிதர்களில் பலவகைப் பைத்தியங்கள் உண்டு. அதில் இது ஒரு வகை! ஆயின் - பாவம் உனது இளமையும் அழகும் கெட்டழிந்து பாடு படுவது கண்டு எனது ஆழ்ந்த அனுதாபங்கள்.

சினந்தெழுந்து என்னை வெருண்டு நோக்கும் மல்லிகையே! "செப்புச் சிலைக்கும் படத்திற்கும் உருவத்திற்கும் நான் பலியாகி மாள்வதை நீயேன் தடுத்துநிறுத்தி எனக்கு வாழ்வளிக்க முயலக் கூடாது" என்றுதானே கேட்கிருய். அஞ்சுகிறேன் - அச்செயலை இந் நிலையில் மேற்கொள்ளின் எனது எலும்புகளை நொறுக்கிக் கூட்டியெடுத்துக்கூடையில் அள்ளிவிடுவார்கள்.

காலை அரும்பிப் பகலெல்லாம் போதாகி மாலை மலரும் மல்லிகையே! உந்தன் வெண்மைநிறம் தூய்மையோடு அழகும், எளிமையோடு இனிமை யும் வாழ்வில் அமையவேண்டுமென அறிவுறுத்து கின்றது.

உந்தன் குளிர் அளைந்த மென்மை மற்றை யோருக்கு ஈரஉள்ளமுடன் ஒல்லும் வகையெல்லாம் உதவிசெய்யும் கருணையும், பாசமும் பற்றும் கொண்டு வாழவேண்டுமென விண்டுரைக்கின்றது.

உந்தன் வெண்மை, தண்மை, மென்மை ஆகிய வற்றின் உள்ளிருந்து பிறந்த நறுமணம் யாதொன் றுக்கும் திங்கிழைக்காமல் எந்நாளும் உயர்வும் புகழுமே கொடுத்தல்போல பழுதற்ற புகழும் இணை யற்ற மேன்மையும் வாழ்வில் உயர்ந்தோங்கி விளங்க வேண்டுமென எனது உள்ளத்திற்கு உரைக்கிறது.

அன்பு மல்லிகையே! உன்னிடமிருந்து பெற்ற படிப்பினையை மறவேன் - மகிழ்ச்சி - வருகிறேன் - விடைகொடு.

◁□▷

சங்ககாலப் பெண்கள் வீரம்

ராஜம் குப்புசாமி, சென்னை.

எடுப்பு

பாயும்புலிக் குணத்தார் சங்ககாலப்
பைந்தமிழ்ப் பெண் இனத்தார்!

உடனெப்பு

சேய்களைக் காப்பதற்குத் தாய்கள்தன் ஆவியும்
[ஈந்திடுவார்
சேவற் குணம்உடையோர் சீர்க் கண்ணகிப்பண்
[புடையோர்

அடிகள்

போர்க்களம் போகாத பிள்ளை பெற்றேனென்று
பெற்ற வயிற்றை அறுத்திட்ட பெண்கள்
கூரிய வேலைக் களிறுடல் பாய்ச்சிப்பின்
கொல்லாமல் மீண்டோனை நில்லாதேமுன்
[னென்றதாய்கள் (பாயும்)
முத்தமிழ் வல்லராய் மன்னரவைகளில்
வித்தாரம்பாடி
விருதுகள் பெற்ற வழிவந்த பெண்களே!
புத்தம்புதுத் தமிழ் நாடென்று சொல்லிட
போர்க்களம் எல்லோரும் புறப்படுவீர்! ★

வேண்டுகோள்!

திராவிடர் கழகத்தை உயிருக்குயிராய் கருதும் மாண்புமிக்க, மதிப்புமிக்கப் பெரியோர்களே, தோழர்களே! தந்தை பெரியார் அவர்களது 30-1-59ந்தேதி அறிக்கையைப்பற்றி பல, தோழர்கள் பலவாறு இன்னும் கருதுகின்றனர். அதனால் சென்னையில் உள்ள நிலைமைக்கேற்ப என்னைப் பொறுத்தமட்டில் எனது தாழ்மையான உள்ளக் கிடக்கையை பொதுமக்கள் முன்வைக்கவேண்டி எழுதலானேன்.

தலைவர், தந்தை பெரியாரது அறிக்கை நடு நிலைமையாளர்க்கு, நேர்மையாளர்க்கு நியாய மான நடவடிக்கை என்றே ஏற்பட வேண்டும். அய்யா அவர்கள் அழுதுகொண்டே எல்லார் முன்னேயும், படித்தார்கள் பேசினார்கள் தனது இல்லத்தில்.

தந்தை பெரியார் அவர்களை சந்திக்கும் வாய்ப்பு (சென்னையில்) கிட்டியபோது, நான் அறிந்த வரையில் - என்னுடன் பல தரப்பட்ட கருத்துடைய தோழர்களும் உடனிருந்தார்கள்; அய்யா அவர்கள் வெளியிட்டது திரு. அண்ணாத்துரையின் வாடை மீண்டும் அடிக்கிறது. இதைத்தடுத்தே ஆக வேண்டும் என்று பகன்றார்கள்; எனவே, அய்யா மேற்கொண்டது அறுவை சிறிதளவில் என்றே குறிப்பிட்டிருக்கிறார்கள்.

பெரியார் தொண்டன் நான்; பெரியார் ஆணைக்குக் கட்டுபட்டவன் நான் என்று நினைவில் கொண்டுள்ளவர்கள் நிலை தடுமாற மாட்டார்கள் பெரியார் அளிக்கும் முடிபு யாதாயினும் ஏற்றே தீருவோம்.

நமது இயக்கத்தில், நம்மிலே நல்லவர்கள் நல்ல மனதுடையவர்கள் - நல்ல உழைப்பாளிகள் உண்டு அவர்கள் தான் நாம் - பெரியார் தொண்டர்கள். மேற்கண்ட அறிக்கையால் மயக்கம் எய்தி இருக்கிறார்கள் சிலர். தலைவர், தந்தை பெரியார் அவர்களது நடவடிக்கையில் சிக்கிக் கொள்ளுவோர் யாராயினும் நமது அன்பு மிக்க பண்பு மிக்க. மதிக்கத்தக்க, மாண்பு மிக்கத் தோழர்கள். மாபாவிகள் அல்லர். அதனால் தந்தை பெரியார் மிகவும் கவலைப் பட்டார் மிக மிக கவலைப்படுகிறார்.

நமக்கும் கூட அதே நிலைதான் அப்படி கவலைப் படுவது யாவர்க்கும் இயற்கையும் கூட. ஆனால், நாம் கொண்டுள்ள பயணம் மேடு பள்ளங்களைக் கடக்க வேண்டியது. தாறு மாறானது. மேலும் வழுக்கு நிலம். காட்டுப்பாதை. ஆங்கே செங்குத்தான கற்பாறைகளும் உண்டு. இடையிலே போர்க் கோலம் பூண்டுள்ளோம். மேலும் அடுத்த கணம் செல்ல வேண்டும் பகைப் புலம் நம்மை அழைத்து விட்டது. பலர் அந்தப் பயணத்திலே வீழ்ந்து படலாம்.

இந்த நிலையில், படை பிளக்கப் பட்டால் நமது குறிக்கோள் சிதைந்தது, தள்ளாத வயது, தடியூன்றி செல்கின்றார் முன்னே தந்தை பெரியார். பின்னே நமக்குள் பிணக்குகள்.

நாம் நோக்கும் விடுதலை இதனால் நமக்கே கெடுதலையாகிவிடும். எனினும் நாம் வேண்டிநிற்பது விடுதலைப் பயன் நமக்குமட்டுமா? நம்மை எதிர்நோக்கித் துணை புரியும் நம்மவர்க்கும், நம் சந்ததியினருக்கும், நம் நாட்டவருக்கும் – நந்தமிழர் யாவர்க்கும். மறந்தனையோ!

அகமுடையானின் அன்பு உள்ளம் வேற்றாளின் கண்ணும் பெற முடியும், (?) அது கற்புடை மகளிர்க்கு எண்ணக்கூட இழுக்காகுமே.

பெரியாரின் பெருந்தொண்டர்கள நாம் என்று பூரிப்படைகிறோம். ஆகவே, தலைவர் தந்தை பெரியார் என்ன நடவடிக்கையில் ஈடுபாடு உடையவர்களானாலும் நமது பயணத்தில் நாம் திரும்பிப் பாராமல் தொடர்ந்து செல்வோம்.

"தந்தை பெரியாரின் எந்த நடவடிக்கையையும் ஆணையாகக் கொண்டு பணிந்து செல்வேன்" என உறுதிகொள்ளுங்கள். அதைப் பெரியார்க்கு உடனே தெரிவிக்கலாம். தெரிவிக்கவும்.

வணக்கம். நன்றி!

மீனம் - வெங்கடேசலு,
சென்னை.

<★>



பாராட்டு விழா...

பாட்டு எழுதியதால்தான். அதைவிட்டுக் கடவுளை அடைவதற்கே வழிகாட்டும் பாட்டுக்களை எழுத எண்ணியதே இல்லை அவர்.

நம் நாட்டை நாம் ஆளவேண்டும் தமிழன் கீழான நிலையை விட்டுத் தனக்குரிய இடத்தை யடையவேண்டும் என்ற கருத்து மக்கள் உள்ளத்தைக் கவரக்கூடியதாகும். அத்தகைய கருத்தையும் தெளிவான–புரியத்தக்க வகையில் செய்யுள் இயற்றவல்லானை நோக்கிப் பெரும் புகழ் வந்து குவியக் கேட்பானேன்.

இதில் பாரதியாருக்கு எத்தனையோ எதிர்ப்புக்கள் இருந்தன. அதற்கெல்லாம் அவர் அஞ்சிவிடவில்லை. தமிழ்மொழியோ தொன்மையுடையது எந்தக் கருத்தையும் எளியநடையில் சொல்லுதற்குத் தமிழ்போல் ஒருமொழிகிடைப்பதும் அரிதன்றோ !

அப்போதிருந்த (புதுவையில்) அரவிந்தர் கூட முதலில் தமிழ் வளமுடைய மொழி அல்ல என்றுதான் நினைத்திருந்தார். உணர்வும் அறிவும் வேறு வேறு பொருளுடைய தென்பதற்குத் தமிழில் ஆதாரம் உண்டா என்று பாரதியாரை அரவிந்தர் கேட்டார். அதுபற்றி வருந்தியிருந்த பாரதியாருக்கு – உணர்வு எனும் பெரும்பதம் தெரிந்து நாடினேன் நாடி நான் கண்டுகொண்டேன். என்ற ஆழ்வார் செய்யுளை நான் நினைவு படுத்தி அரவிந்தர்க்கும் தமிழின் பெருமை விளங்குபடி செய்ய நேர்ந்தது.

பெரியோர்களே தாய்மார்களே உங்களுடைய பேராதரவாலும் நம் முதல்வர் திரு, காமராசர் தொல்லை நோக்காது இங்கு வருகை தந்து சிறப்பித்ததாலும் புலவர்விழா நன்முறையில் இனிது நிறைவேறிற்று.

தமிழ் வாழ்க. தமிழகம் வெல்க. புலவர் குமாரசாமி வாழ்க. என முடிக்க – பெருமக்களும் தமிழ் வாழ்க என்ற வாழ்த்தொலியுடன் பிரிந்தனர்.

முதலமைச்சர்க்கு விருந்து

விழா முடிந்ததும் வாணிகரும், அலுவலாளரும் புலவர்குமாரசாமியும், வழக்கறிஞர்களும் மருத்துவ அறிஞர்களும் புடைசூழப் புரட்சிக் கவிஞர் இல்லம் சேர்ந்தார் முதலமைச்சர்.

திரு. இராம. தமிழ்ச்செல்வம், சர்மா இவர்கள் வெளியிட அமைத்திருந்த திருவள்ளுவர் படம் முதலமைச்சர்க்குக் காட்டப்பட்டது. படம் முதலமைச்சர் கண்ணையும் மனத்தையும் கவர்ந்ததில் வியப்பொன்றுமில்லை.

விருந்து நூற்றுக் கணக்கான திருவாளர்களுடன் அமர்ந்துண்டு மகிழ்ந்த முதல்வர் சிறிதுபோது இருந்து விழுப்புரம் புறப்பட்டார்.

விழாச்சிறப்பு

விழாச்சிறப்பு. முதல்வர் புதுவைக்குப் பல கல் தொலைவில் கால்வைத்தபோதே தொடங்கியதாகும் அங்கிருந்தே பெருமக்கள் ஆவலோடு முதலவரைக் காண இருமருங்கும் நின்றிருந்தார்கள் பட்டாணிக் கடை வந்ததும் மக்கள் சூழ்வு அளவுகடந்ததாகிவிட்டது. முதல்வர் விழாவுக்குப்பின் விழுப்புரம் போக வழிவிட்ட மக்களின் எண்ணிக்கை நூறுயிரக்கணக்காகும் இது மக்கள் நெருக்கம்பற்றியது. விழா நடைமுறைச் சிறப்பைக் கூறவேண்டுமானல் தொடக்க முதல் விழாஇறுதி வரையில் விழாப் பெரு மன்றிற் கூடியிருந்த ஆடவர் பெண்டிர் கண்களும் மனமும் சொற்பொழிவையும் மன்ற அமைப்பையும்விட்டுஒருநொடியும் வேறுபுறம் திரும்பவேயில்லை

மாலையில் இயங்கிய புதுவை மக்களின் இயக்கமெல்லாம் வேதபுரீசர் நூல் நிலையம் நோக்கியே. இரவு பத்து மணிக்கு வேதபுரீசர் நூல் நிலையத்திலிருந்து பிரியாது பிரிந்த மக்கட் கடல் தத்தம் இல்லம் நோக்கியே பெருக்கெடுத்தது.

(குயில் செய்தியாளர்.)

வெண்பா வினவிடைப் பகுதி

வினு : முதலிரண்டு அடிகள். விடை : ஈற்றிரண்டடிகள்.

வினு : ம. க. அன்பெழிலன், மதுரை. விடை : "சித்தன்"

மூவாத் தமிழை முனைந்தும் உயிரீந்தும்
காவாத் தமிழன் கதிகூருய் — பாவாணு!
வந்தேறி யின்கால் வருடிப் பிழைத்திடுவான்
அந்தோ பிணமே அவன்!

★ ★ ★

குன்ரும் தமிழ்வீழ்த்தக் குற்றுளியாம் இந்திவரின்
இன்றுடனே நாமீண் டியற்றுவதென் — அன்றுடம்
செந்தமிழே கற்போம்: செழிக்கத் துறைதோறும்
நந்தமிழை நாம்புகுத்து வோம்!

வினு : இராகவன், காஞ்சி. விடை : சித்தன்.

படத்தொழிலில் நற்குடும்பப் பாவையர்கள் சேர்தல்
கெடத்தான் வழியோ இளத்திர் — தடித்தபெரும்
பூனைகளின் ஆட்சியினில் போய்வாழு மோ.கிளிகள்
ஆனதினுல் ஆகா தறி!

வினு : புலவர் பழனிவேலன் B. O. L. அரந்தாங்கி. விடை : பா. முத்து.

நல்லவர்போல் நம்மிடையே நன்கு நடித்துலவும்
புல்லரைப் போக்கும் புடையாது — சொல்லக்கேள்
ஆற்றுந் துணேயும் பொறுத்திடுக: அஃதின்றேல்
தூற்றுதே தூர விடல்!

வினு : சிந்தாமணி, நாமக்கல். விடை : பா. முத்து.

அம்மி மிதித்தும் அருந்ததி பார்த்தும்தான்
நம்முன்னோர் மன்றல் நடத்தினரா — இம்மியுமே
நந்தாப் புகழ்த்தமிழர் நாடவிலே அம்முறைகள்
சிந்தா மணிநீ தெளி!

வினு : பா.மு. சாமி, புதுவை விடை: சித்தன்

வானூர்ந்த வள்ளுவனின் வண்குறளில் சொல்லரிய
தேனூர்ந்த இன்பம் தெரிவதேன் — ஆனூர்ந்த
இன்பாலும் தேனும் இனிப்பதெவன் என்கின்றீர்
என்னபதில் சொல்வேன் இதற்கு.

தொண்டு

< அண்ணாமலைநகர் தமிழன்பன் >

தொண்டு புரிந்திட வேண்டுமையா – நெஞ்சில்
தூய்மை யதனுல்வந் தீண்டுமையா!
மண்டிணி ஞாலத்து வாழ்வினிலே - தாழ்வு
யாவும் மடிந்துமே வீழுமையா!
தன்னல மற்றிடல் வேண்டுமையா - நல்ல
தாயுள்ளம் பெற்றிடல் வேண்டுமையா!
இன்பஞ் சிறிதுநாம் பெற்றிடினும் – அதை
எல்லார்க்கு மாக்கிடல் வேண்டுமையா!

துன்ப முறுகின்ற மாந்தரெல்லாம் - உடன்
தோன்றலாய் எண்ணிடல் வேண்டுமையா!
அன்பர் பணிசெய்ய ஆளாகினுல் - வாழ்வில்
அண்டுமா செல்லாந்தூ ளாகுமையா!
நாட்டுக்குச் செய்திடுந் தொண்டதனுல் - நலம்
நாடி அடைந்திடல் திண்ணமையா!
வீட்டை மறந்திடல் கூடாது - அங்கே
தொண்டை விளைத்திட வேண்டுமையா!

மொழிக்குப் பணிகள் செய்திடுவோம் - அதன்
முன்னேற்றம் கண்டிவண் உய்ந்திடுவோம்!
பழியெலாம் தீர்த்திடல் நல்லதையா – அது
பண்பினைத் தந்திட வல்லதையா!
இன்னல்கள் பற்பல வந்திடினும் – அவை
ஏற்றுப் புறங்காண வேண்டுமையா!
கன்னலாய்த் தொண்டினை மேற்கொண்டே - நாம்
காலத்தைப் பொன்செய்ய வேண்டுமையா!

செய்யலாம்!

தமிழ்த்துளி, திருவையாறு.

அன்புத்தமிழ் நாட்டினிலே
அகத்திருக்கும் நாம் – தமிழ்
அகிலமெல்லாம் பரவும்வகை
ஆக்கம்செய்ய லாம்

இன்பத்தமிழ் நாட்டினிலே
இனிதிருந்த நாம் – தமிழ்
இயன்றமட்டும் தூய்மையாக
இருக்கச்செய்ய லாம்

கன்னித்தமிழ் நட்டினிலே
களித்திருந்த நாம் – தமிழ்
காப்பதுபோல் வீழ்த்துவோரைக்
களைந்துதள்ள லாம்

மென்மைத்தமிழ் நாட்டினிலே
மேன்மையுற்ற நாம் – தமிழ்
மேலைநாட்டில் நூல்களாக
மிளிரச்செய்ய லாம்

முன்னைத்தமிழ் நாட்டினிலே
முடியணிந்த நாம் – தமிழ்
மூத்ததென்று உலகமெங்கும்
முரசுகொட்ட லாம்

பின்னைத்தமிழ் நாட்டினிலே
பிள்ளையெல்லாம், நாம் - தமிழ்ப்
பேணிவைத்த தங்கத்தட்டில்
பிறங்கச்செய்ய லாம்

அமுதான தமிழ் மொழி!

சேலம், செ. சி. இராமசாமி.

அமுதான தமிழ்மொழி வாழ்கவே - இந்த
அவனி எல்லாம் புகழும் (அமு)

தமிழ் என்ருலே பொருள் இனிமையாகும்
தாரணிமேல் அதனுலே தனிப் பெருமையாகும்
(அமு)

கால வெள்ளத்தாலும் தன்னிளமை
மாருதமொழி – தமிழ்
காவலர் மூவர்கண்ணெனக் காத்த மொழி
தேவர் செய்தகுறள் பிறந்த மொழி – தமிழ்த்
தேனின் இனித்திடும் செந்தமிழ் மொழி (அமு)

சித்திரைமாத முழு நிலவாகித் – தமிழ்
இத்தரை மீதில் புகழொளி வீசுதே
எத்தரை வித்தகரும் என்றும் போற்றும் – தமிழ்
பத்தரை மாற்றுப் பசும்பொன்னுன நம் (அமு)

விடுதலை பெறுவோம் வாரீர்

திருச்சி, இளங்கீரன்

மானமே பெரிது; உயிர் பெரிதல்ல என்ற வரம்பினை உடையது நமது சமுதாயம். மானம் பெரிதா? உயிர் பெரிதா? மானம், உயிர் என்ருல் என்ன?

கன்னியொருத்தியைக் கயவன் ஒருவன் கற்பழிக்கத் துணிகிருன். அவள் மானமே பெரிது, உயிர் பெரிதல்லஎன்ற எண்ணம் உடையவளாயின் தனதுமானம் பறிபோகுமுன்பே நாக்கைப் பிடுங்கிக் கொண்டு செத்துவிடுவாள். இதுதான் மானமே பெரிது என்பார்தம் செயலாம். மானத்தை இழந்து விட்டு அதன் பிறகு அவன்மேல் வழக்குத்தொடுக்க முயலுவது உயிரே பெரிது என்பார்தம் செயலாம்.

'மானம் அழிந்தபின் வாழாமை முன்னினிதே' என்று வகுத்துள்ளது நமது சமுதாயம். மயிர்நீப்பின் வாழாத கவரிமானைப்போல மானம்போய்விட்டால் வாழக்கூடாது என்ற வரம்பை ஏற்படுத்தியதும் நமது சமுதாயந்தான். மானமேஉயிரைவிடப்பெரிது உடலும், உயிரும்நேற்றுத்தோன்றி, இன்றுஇருந்து, நாளை அழிந்துவிடும் தன்மையை உடையதாம்.

மானத்தோடு வாழ்ந்து, மானத்திற்காக மடிந்தவனைத்தான் உலகம் மதிக்கும். இருந்தால்தானே மானத்தைக் காக்க முடியும் என்று கேட்க வேண்டாம். உயிர் ஏற்பட்ட பின்தான் மான உணர்ச்சி ஏற்படுகிறது. அந்த மானத்தைக் காக்க, மானம் என்ருல் என்ன என்று நாம் அறிந்து கொள்வதற்கு அடிப்படையாக இருந்த உயிரையே கொடுத்தாலும் அது ஒன்றும் பெரிதாகாது.

மானமே பெரிதென்று எண்ணி மாற்ருன் மரியாதையின்றி ஈந்த நீரைப் பருகாமலேயே உயிரை விட்டான் சேரமன்னன். "என்மகன் மார்பிலே புண்பட்டு மாண்டானு? முதுகிலே புண் பட்டு மாண்டானு? அவன் முதுகில் புண்பட்டு இறந்தது உண்மையாயின் அவனுக்கு மறப்பால் ஊட்டிய மார்பினை அறுத்தெறிவேன்" என்றும், 'மாற்ருன்படையெடுத்து விட்டான். தந்தையையும் மாமனையும் இழந்து விட்டாய். எனினும் நீயும் மானத்தைக் காக்க ஓடிடு செருமுனைக்கு" என்றும் கூறிய புறநானூற்றுத் தாய்களின் வழிவந்தோர் நாம்.

இத்தகைய பரம்பரையிலே உதித்த நாம்தாம் இன்று மாற்ருனிடம் மண்டியிட்டு அடிமை வாழ்வு வாழ்கிருேம். மாற்ருனைத் தேவனுக எண்ணி, "இறையே என்னைக் காப்பாற்று" என்றும் இறைஞ்சுகிருேம். வெட்கமிலாது நமது தாய் நாட்டை மாற்ருனுக்குக்காட்டித் தருகிருேம். இவை யாவும் சரிதானு? சிந்தித்துச் செயல்புரிந்த செந்தமிழா, இன்று நீ சிந்திக்கத் தவறிவிட்டாய். இனியாவது சிந்தித்துப் பார்.

தாய்நாட்டை இன்று மாற்ருனுக்குக் காட்டிக் கொடுப்போர். "நாய் நன்றியுள்ள பிராணி" என்று பாராட்டப்படுவதுபோல் இன்றுமட்டும் பாராட்டப் படுவார்கள். ஆனல் நாளைக்கு, அதாவது நாம் விடுதலை அடைந்த பிறகு அவர்கள் "நன்றிகெட்ட நாய்" என்று நிச்சயமாக நம்மாலும், அவர்களாலும் தூற்றப்படுவார்கள். அதாவது நாய் எப்படி இருதலைக் கொள்ளியாகப் பேசப்படுகிறதோ அதுபோல ஏசப்படுவார்கள்.

தாயக விடுதலையை விரும்பாதவர் தரணியில் பிறந்தும் யாது பயன்? "தோன்றிற் புகழொடு தோன்றுக" என்ற குறளுக்கு அணியாக நாம் இருக்கவேண்டாமா? நாம் அடிமை வாழ்வு வாழக் கூண்டுக்கிளி அல்லவே. ஆறறிவு கொண்ட மனிதன் அல்லவா நாம்! அதுவும் மானமே உயிரினும் பெரிது என்ற உயரிய பண்பாடுடைய தமிழகத்தில் பிறந்த தவச்செலவரன்ருே நாம்! சிந்தித்துப் பாருங்கள்.

இனஇழிவு அடிமைத்தளை ஆகிய இவைகள் நீக்கிய வாழ்வுதான் வாழ்வு, அதாவது விலங்கு வாழ்விற்கு ஒப்பாம்.

நாம் விலங்கு வாழ்வு வாழவேண்டாம். எப்பாடு பட்டேனும் தாயக விடுதலை பெறுவோம் வாரீர்.

விற்பனையாளர்க்கு..

பட்டியல் பணம் இன்னும் அனுப்பாதிருப்பவர்கள் விரைவில் அனுப்பி வைக்கவும்.

- அமைச்சர்.

தலைவியின் கவலை

பொன்மலை இரா. மரியதாசு B. Sc.

தலைவனும் தலைவியும் இல்வாழ்க்கையிலீடுபட்டு எல்லையில்லா இன்பம் எய்தினர். ஓருயிரும் ஈருடலுமாக உவகைக் கடலில் நீந்தினர். காலம் கடிதே சென்றது. ஓர் நாள் தலைவன் பொருள் ஈட்டும் பொருட்டுச் சுரமேகுகிறான். தலைவனது பிரிவாற்பசலையுற்றாள் பாவை. உடன் பதில்காணாத மங்கை மறந்துவிட்டான் மணாளன் என்றெண்ணினாள், புண்ணாலாய பெரும் புனபுயிற் எரி நுழைந்தாலென வருந்தினாள்.

இவ்வாறு காதற் நோயாற்கவன்று தலைவன் பிரிதலான் மெலிவடைந்த தலைவியை நோக்கித், "தேற்றுக, நம் காதலர் நிலைமை தவறாத வாய்மையுடையவர்; நெடிதாகத் தோன்றுகின்ற இனிமையுடையவர்; சடுதியில் திரும்புவார் சஞ்சலம் நீங்குக" எனக்கூறித் தேற்றுகிறாள் தோழி. தன்னை வலிதிலே பொறுத்திருவென்று தெளிவிக்கும் தோழியை நோக்கித், "தோழி! நம் காதலர் இல்வாழ்க்கையிலிருப்பதினுங் காட்டில் இனியபொருள் வேறொன்றுளதெனக் கருதிச் சென்றனர்போலும்: அங்ஙனமாக அவர் என்னைப் பிரிந்ததன்றி எத்தன்மையளாயினாளென வினவியறிந்தாருமிலர். எவ்வளவு விருப்புடையவராயினும் இப்பொழுது எம்மை நினையாதவராயினர்; அன்றியும் அவருக்கு உடன்பட்ட என் நெஞ்சும், நெகிழ்ச்சியுற்ற தோளும், வாடிய எனது நிறமும் பார்த்துப் பாணித்தலின்றி இப்பெரிய துன்பமுற்றவள் என்ன காரியஞ்செய்து கொண்டனளோவென்று ஒரு நாளேனுங்கூறினாரிலர். யானடைந்ததுன்பநோயோ விரிந்த கடனீர் சூழ்ந்தநிலத்தின் எல்லையளவையுங் கடந்தன; உசாவுந்துணை வேறியாதுமில்லை; இனி எவ்வண்ண முய்வேன்?" என்று கூறிவருந்தா நின்றாள்.

இத்தலைவியின் வடிவு நற்றிணையில்;

தமதுசெய் வாழ்க்கையின் இனிய துண்டோ
எனவிருப் புடையார் ஆயினும் நினைவிலர்
நேர்ந்த நெஞ்சும் நெகிழ்ந்த தோளும்
வாடிய வரியும் நோக்கி நீடாது
எவன்செய் தனளிப் பேரஞர் உறுவியென்று
ஒருநாள் கூறின்றும் இலரே விரிநீர்
வையக வரையளவு இறந்த
எவ்வ நோய்பிரிது உயவுத்துணை இன்றே

★○✶

கூற்றுவனைவிடக் கொடியர்

வித்துவான், தா. குருசாமி, சின்னாளப்பட்டி.

ஆரியர் குருதியில் தோன்றிய கேரளர்
பூரிப் புடனே புதுமை கண்டனர்!
கண்ட புதுமை என்னவோ என்றால்
ஐயப்ப னென்றோர் கடவுளை ஈன்றனர்!
இருக்குஞ் 'சாமிகள்' போதா(து) என்று
பெருக்கிக் கதையைப் புதிதாய்த் தோற்றி
ஆரியப் பேடிகள் வாய்க்கும் பொழுதெலாம்
நேரிய தமிழர் நெஞ்சிற் போட்டனர்!

பல்கலைக் கழகப் பட்டம் பெற்ற
பார்ப்பா னொருவன் ஐயப்ப னாரின்
அளக்க லாகா அற்புதக் கதைகளை
விளக்கக் கேட்டேன்! வெம்பிய துள்ளம்!
அரிமேல் வருவராம் அவன்பேர் சொன்னால்
நரியும் விலகுமாம் நண்ணி வணங்குதீர்!
என்றே சொல்லி ஏமாந்த சிலரொடு
முதலீல் லாமல் வணிகஞ் செய்து
பெரியவ னாகி விட்டான் தமிழீர்!

ஏமாந்த சிலரும் யாரெனக் கேட்பீர்
கொள்ளை யடித்தோர் கூட்டிக் கொடுத்தோர்
பிறர் பொருளுக்குப் பெருவழக் காடியோர்
பிறன் மனை விரும்பிய பேதமையாளர்
கயவர் திருடர் ஐயனின் சீடர்!
பொய்யல முழுதும்! அணுகி ஆய்ந்தவை!

இவர்களை முதலாய் வைத்துப் பார்ப்பான்
படித்தவர் பலரையும் ஈர்க்க எண்ணிச்
சபையுங் கூட்டிச் செந்தமி ழுளத்தை
வாட்டி வருகிறான் கேட்பா ரில்லை!
காட்டுக் கூச்சல்! தமிழரா இவர்கள்

பத்தி நெறியைப் பரப்பப் பார்ப்பான்
மூத்த தமிழரின் பாக்களைக் காட்டாது
அற்புதக் கட்டுக் கதைகளைக் கூறி
விலங்கு நிலைக்கு இழுத்துச் சென்று
கூற்றுவ னைவிடக் கொடுமைசெய் கின்றான்!
எல்லாத் தமிழரும் விழித்தால்
பொல்லாப் பார்ப்பான் புரட்டொழி யும்மே!

குயில்

Regd No. M. 7030

அரங்கரத்தினம் - சாவுக்கு வரவேற்பு.

<>

அன்னையின்சீர் அழிப்ப தற்கே
ஆளவந்தார் முயலு கின்றார்
இன்னுமவர் திருந்த வில்லை
சாவே வா! - அவர்
இனியேனும் திருந்து தற்கே
சாவே வா!

தென்தமிழின் சீர ழிக்கத்
தில்லியினோர் முயலு கின்றார்
இன்னுமவர் திருந்த வில்லை
சாவே வா! - அவர்
இனியேனும் திருந்து தற்கே
சாவே வா!

வானொலியை நீக்கி, ஆகாஷ்
வாணிஎன்று முழங்கு கின்றார்
மானங் கெட்டோர் நடுங்கும்படி
சாவே வா! - என்
வண்டமிழர் எழுச்சி கொள்ளச்
சாவே வா!

ஆனதமிழ் அமைச் சரையும்
அறிவழித்தார் தில்லியி னோர்
தேன் என்றே உனையழைத்தேன்
சாவே வா! - என்
செந்தமிழர் எழுச்சி கொள்ளச்
சாவே வா!

அரிதுசெய்தான் அரங்க ரத்தினம்
அறம் விளைத்தான் என்னும்படி
இருகையால் வரவேற் றேன்
சாவே வா! – என்
இன்பத் தமிழ் வாழ்ந்திடவே
சாவே வா!

தெரியட்டுங்காண் உலகுக் கெல்லாம்
செந்தமிழர் எழுச்சித் திறம்
புரியட்டுங்காண் தில்லிக் கொடுமை
சாவே வா! – உயிர்
போகட்டுங்காண் தெரியுஞ் சேதி
சாவே வா!

ஆசிரியர், வெளியிடுவோர், பொறுப்பாளர்: பாரதிதாசன், புதுச்சேரி.
அச்சிடுவோர்: மா, தண்டபாணி, பழநியம்மா மின்விசை அச்சகம், புதுச்சேரி.